[1980 பிப்ரவரி 11

துடியலூர் கோயில்பாளையம் வாரச்சந்தை.

*வினா எண். 108: திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையை அடுத்த துடியலூர் கோயில்பாளையம் வாரச் சந்தையில் அரசு நிர்ணயித்த விகிதத்திற்கு மேலாகக் கட்டணம் வசூலிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) கட்டண வசூலுக்கு முறையான ரசீது வழங்கப் படுகிறதா ?

(இ) அதிகக் கட்டண வசூலைத் தடுத்து நிறுத்தவும், முறையாக ரசீது வழங்கவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) அவ்வாறு வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு, ரா, வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே. கோயில்பாளையம். துடியலூர் சந்தைகளைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு வரி வசூல் நடக்கக்கூடிய விஷயத்தில் அதிகமாக நடக்கிறது என்பதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கிற செய்தி அந்த வரியை காண்ட்ராக்ட் விட்டு. டெண்டர் விட்டு தனியார் வசூல் செய்வதற்குப் பதிலாக அரசே நேரடியாக அந்த சந்தைகளில் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே. இதிலே அரசு தலையிட முடியாது.

கிணத்துக்கடவு ஒன்றியப் பகுதியில் உள்ள பம்புசெட்டுகள்.

*வினா எண் 109 : திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கிணத்துக்கடவு ஒன்றியத்தில் இருக்கும் பல ஆழ்குழாய் பம்புசெட்டுகள் ஒரு வருடத்திற்கு மேலாக வேலை செய்வது இல்லை என்பது உண்மையா ?